
# திரு. சபாபதிப்பிள்ளை சின்னத்தம்பி



தோற்றம்:
**15-10-1903**

மறைவு:
**23-12-1978**



உ



கைதடி வடக்கு

வாசரும்

உயர் வேளாண்குல திலகரும்

பிரபல சமூகத் தொண்டருமான

# திரு. சபாபதிப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்களின்

# நினைவு மலர்

இயற்றியவர்
இசைப்புலவர் சி. செல்லத்துரை

# இறந்ததினம்

## வெண்பா

பொங்குசனி காலயுத்தி பூணுந்நல் மார்கழியில்
தங்குமிரு பான்மூன்றே டத்தமதில் — மங்குதிதி
ஒன்பதிலே கைதடியூர் சின்னத்தம்பி சென்றடைந்தான்
மன்னு சிவன் பாத மலர்.

## ஆசிரியப்பா

இந்துவின் முத்தாய் இலங்கிடும் இலங்கையில்
பொங்கிடும் வடபால் பொலியும் யாழ்நகர்
அப்பதிக்கணியாம் அழகுறு கைதடி
செப்பிய குலவழி சீர்பெற் றிலங்கிய
அம்பலவாணர் அருங்குடிப் பிறந்த
சின்னத்தம்பியாம் சீர்பெறு செம்மலை
சபாபதிப்பிள்ளையும் ஆச்சிப்பிள்ளையும்
செய்திடு தவத்தில் செகத்தில் பிறந்த
செப்பும் ஆறு மணிகளுள் ஒருவராம்
சின்னத்தம்பியின் சிறப்பினை இன்னும் கேள்
சொன்ன கல்வியைச் சுவையுடன் பயின்றவன்
ஊரவர் உறவினர் உவந்து போற்றிட
பேர் புகழ் பூத்துச் சீருடன் வாழ்ந்தவன்
சமூகப் பணிகள் சாலவும் செய்தோன்
மேழிச் செல்வம் கோழை படாதெனும்
ஆன்றோர் மொழியை ஊன்றி நினைந்து
கமத்தொழில் தன்னைக் கருத்திற் கொண்டவன்
காளைப் பருவம் கலந்திடும் போதில்
கைதடிப் பதியில் மெய்தவழ் குலத்தில்
உறைதரு விஸ்வ நாதனும் மனையாள்
சின்னம்மாவும் சீருடன் பெற்ற
சின்னத் தங்கமாம் வண்ணக் கொடியினை
திருமணம் புரிந்து வருவிருந் தோம்பி
மங்கல மணத்தின் நன்கல ஞகிய
மைந்தர் ஐவரை மங்கையர் இருவரை

வாழ்க்கைச் செல்வம் வளம்பெறக் கண்டனன்
கனகரத்தின மெனும் காளைக் குசனூர்
சரஸ்வதி யாளைத் தகுமண மாற்றியும்
நவரத்தின மெனும் நற்குரி சிற்கு
கைதடி உறைதரு கனங்குழை மங்கை
தவமணி தேவியை தகுதியிற் தெரிந்தும்
மட்டுவிற் விஜய லட்சுமி மங்கையை
உற்றிடு செல்வ ராசற் குவந்தும்
மைந்தன் சபாபதிப்பிள்ளை தனக்கு
புன்னாலைப் பதி புனித நல்நங்கை
ஜெகதாம்பிகை எனும் தெரிவையைத் தெரிந்தும்
கொடி காமத்துறை குலவிளக் கான
தரும குலசிங்கத் தக் கோன் தனக்கு
தவமணி தேவியை தகவுடன் தொடுத்தும்
செல்வ நாயகச் செம்மல் தனக்கு
தருமகுலத்தின் தங்கை நல் மங்கை
சரோஜா தேவியை தகவுடன் பெற்றும்
திருமணம் இயற்றி சிறப்பைக் கண்டனன்
பேரப் பிள்ளைப் பெரும் பேருக
சயந்தன், மாலதி, சேந்தன், விநோதன்
ஜெயபா ரதனொடு ஜெய தாபரனும்
பகீரதன், பரதன், பால நந்தினி,
பத்மிலன், பிரபாஞ் ஜினியும் மற்றும்
ஜெனதரன் உஷாநந் தினி சிவரூபன்
விஜிதா ஜீவாஞ்சன ஜிவகரனும்
பிரதிபனும் பிரகாஜினி என வரு
பேரப் பிள்ளைகள் பிறந்திட மகிழ்ந்து
எல்லையில் இன்பக் கடலில் ஆழ்ந்தவன்
சமூகப் பணியில் தகு வழிகாண
சிகறற் புகையிலை செய்திடு வோர்சேர்
கூட்டுற வொடு முன்னேற்ற சங்கம்
நாவற் குளியினில் நண்ணிய கிராம
சபைதனில் பதவிகள் தாங்கிய பெருமையன்
ஆலய பக்தியில் சாலவும் நிறைந்து
கயிற்றி சிட்டிக் கந்தனில் உருகி

கணமும் புராண படனம் பயின்றனன்
சைவத் தொண்டனை சற்குண வாரியை
மனைவி மக்கள் மருமக்கள் பேரர்
உற்றூர் உறவினர் ஊருளோர் புலம்பிட
பொன்னவா பதியிலும் பொதுப்பணி செயவோ
எழுபத்தைந் தென்னும் ஏற்றதோர் வயதினில்
காலயுத்தி களங்க மில் மார்கழி
திகதி இருபத்து மூன்று சனிநாள்
கிருஷ்ண பக்கத் திதி ஒன்பதிலே
சின்னத்தம்பியாம் சிறப்புற வள்ளல்
கொன்றை வேந்தன் செல்வ னடியினை
சென் றடைந்தனனே சென் றடைந்தனனே.

## மனைவி புலம்பல்

ஈருடலும் ஒருயிரும் போல வாழ்ந்தோம்
என் கடமை செய்துவைப்பீர் என்ற வண்ணம்
ஆரமுதே! நாமிணைந்து வாழ்ந்த வாழ்வு
அரிய மக்கள் எழுவர்தமை பெற்ற பேறு
சீருடனே அன்னவர்க்குச் செய்த சேவை
செப்பரிய காணிநிலம் செல்வ மெல்லாம்
பாரினிலே கனவென்று பறந்து போனுய்
பத்தாவே இனியுன்னை காண்ப தென்றே!

## மைந்தர் புலம்பல்

அப்பாவுன் உதவியொரு கோடி பெற்றேம்
அதை மறந்துன் திருமேனி தீயிலிட்டோம்
இப்பாரில் உனதறிவை அன்பை பண்பை
இன் சொல்லை பத்திதிகழ் இனியவாழ்வை
தப்பாமல் இறைவன் எமக் கீந்த பேருய்
தாரணியிற் தெய்வமென எண்ணி வந்தோம்
எப்போதும் எம்முன்னே நீயிருந்தால்
இல்லமே சுவர்க்கமினி என்செய் வோமே.

## மகன் புலம்பல் (தவமணி)

ஒத்த சுடரனையவிரு மகளிர் பெற்று
உயர்வாழ்வு வளம்கொளிக்க வைத்தாய் அப்பா
அத்தினம் என் அக்காள் முன்போன பின்னும்
அக்கறையாய் உன்பணிகள் ஆக்கி வந்தேன்
எத்தினமும் கண்கண்ட தெய்வமாக
எண்ணி எண்ணி யுன்பணிகள் இயற்றுகிறேன்
இத்தினம் என் அப்பாவே எங்கே சென்ருய்
இரவு பகலுன்னைத் தேடி யலைகின்றேனே.

## மருமக்கள் புலம்பல்

தந்தையென அன்புதந்த எங்கள் மாமா
தகவுடனே மக்களைப் போல் தாங்கி நின்ருய்
சந்ததமும் எங்கள்குடி தழைக்க வைத்து
தருமநெறி தவருது பேணி வந்தாய்
சிந்தை மகிழா தெங்களுக்குத் தந்த அன்பு
சீரமுது தேன்பாலிற் சிறந்ததையா
எந்த நிமிஷந்தனிலும் உன்னை யெண்ணி
இரங்குகின்ருேம் மாமா நீ போன தெங்கே?

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

தாத்தாவே உனக்குநாம் தவறேதும் செய்து விட்டால்
சற்றும் திகைக்காமல் தயவாக அணைத்திடுவாய்
ஆராத அன்புடைய அப்புவே யுன் முகத்தை
நேராகக் கண்டுதுயர் நீங்குவதும் எந்நாளோ
அம்மா அடித்திடினும் அப்பா அடித்திடினும்
சும்மா இருங்களெனச் சொல்லி துயர் தணிப்பாய்
அங்குமிங்கும் நாமோடி ஆடிவிளையாட
தொங்குநடை போட்டுவந்து தூக்கி யணைத்திடுவாய்
செல்லுமிடமெங்கும் சிறகடித்து வந்திடுவாய்
நல்ல குரலோசை நாமினிக் கேட்பதெப்போ?
தாத்தாவே தாத்தாவே என்றழைக்கின்ருேம்
தாத்தா நீ சென்ற இடம் பார்த்துரைப்பார் யாருமில்லை

தாத்தாவுன் தண்ணளியை தங்கத்திரு முகத்தை
பார்த்துமகிழ இனிப் பாரிற் கிடைத்திடுமோ
மோகனத் திருமுகமும் முல்லை மலர்ச்சிரிப்பும்
காணக் கிடைப்பதெப்போ கனியமுதே தாத்தாவே
எங்களது கண்ணில் ஒரு சொட்டு நீர் வடிந்தால்
உன்கண்ணில் ஓடும் உதிரம் மறப்போமோ.

## தேற்றம்

மானிலத்தில் எவர்களுமோ மடிவதில்லை
மரண மென்பதான்மாவின் தேக மாற்றம்
ஊனுடலை ஆக்கிநின்ற ஐம்பூதங்கள்
ஒன்றொன்றாய்ப் பிரிந்திடுதல் மரணமாகும்
போனவுயிர் செய்தவினை சுமந்து கொண்டு
புகுமிடத்தில் அதன் பயனை அடைந்துகொள்ளும்
மானிடரே! உமக்கொன்று சொல்லக் கேண்மின்
மன்னு சிவத் தொண்டாற்றி மகிழ்க நன்றே!

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்
கடிகணபதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.

## திருமுறை 2

நீ நாளும் நன்னெஞ்சே நீ கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலை சுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேற்றப் பெறலாமே நல்வினையே.

## திருமுறை 5

ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னம் கழலடி
நாட்டி நாண்மலர் தூவிவலம் செய்து
வாட்டித் தீர்ந்திடும் வான்மியூரீசனே அப்பா.

## திருமுறை 7

பதியும் சுற்றமும் பெற்ற மக்களும்
பண்டைய ரல்லர் பெண்டிரும்
நிதியிலி மக்கள் வாழும் வாழ்க்கையும்
நினைப்பொழி மட நெஞ்சே
மதியஞ்சேர் சடைக் கங்கையானிடம்
மலரும் மல்லிகை செண்பகம்
புதிய பூமலர்ந் தெல்லி நாறும்
புறம்பயம் தொழப் போதுமே.

## திருமுறை 8

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற்
[கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

## திருமுறை 9

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்
காட்செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருளுளள வில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்றும் என்றும் உள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே — சேந்தனர்

## திருமுறை 10

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.

— திருமூலர்

## திருமுறை 12

ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்
தேன் அடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாநடஞ்செய் வரதர் பொற்றாழ் தொழ.

— சேக்கிழார்

## திருப்புகழ்

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த காடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி வேறுங் கொண்டலின மருகபொன் வயலூரா
குரங்கு லாவுங் குன்றுகாத குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுன் தண்டையு மழகிய பெருமாளே.

முற்றிற்று